Registered as a News paper in Ceylon

★ ★

விலை சதம் 20

JAFFNA COLLEGE LIBRARY 14 FEB 1972

ஈழநாடு

வார மலர்

மலர் 14 | துல்ஹஜ் 27 | மாசி 1 | ஞாயிற்றுக்கிழமை | (13—2—72) | இதழ் 3

பகிஷ்கரிப்பின் மூலம் தமிழர் பிரச்னை தீராது

பலாலி வரவேற்பில் அமைச்சர் குமாரசூரியர்

மாவிட்டபுரம், சனி

"பகிஷ்கரிப்பு வெளிநடப்பு மூலம் தமிழ்மக்களின் பிரச்னைகளைத் தீர்க்க முடியாது. அரசாங்கத்திற்குள் இருந்துதான் நாம் செயல்பட்டு நமது பிரச்னைகளைத் தீர்ககமுடியும். இதற்காகத்தான் நானும் தமிழ் காங்கிரஸ் எம். பி. க்களும் அரசாங்கத்திற்குள்ளிருந்து செயல்பட்டு வருகின்றோம்.

வாரிசேசத்துறை அபிவிருத்தி சபை ஆதரவில் பலாலி ஆகிரியர்பயிற்சிக்கலாசாலை மண்டபத்தில் நடந்த வரவேற்பு விழாவில் நியமன எம்.பி.யும், தமிழ் அமைச்சருமான திரு. செல்லையா குமாரசூரியர் மேற்கண்டவாறு கூறினார்.

திரு. வி.பொன்னம்பலம் தலைமையில்நடந்த இவ்விழாவில் அமைச்சர் குமாரசூரியர் மேலும் கூறியதாவது:- இலங்கையில் புதிதாக உருவாக்கப்படும் குடியரசின் சாசனம் எந்த இனத்திற்கும்பாதகமாக அமையமாட்டாது. நாட்டில்வாழும் இனங்கள் யாவும் தனித்தனித்துடனே வாழ் வழிவகுக்கும். இந்த சாசனத்தில் தேவையற்ற விஷயங்கள் ஏதும் இருந்தால், அதனை எமக்கு எடுத்துச் சொன்னால் நாம் அதனை அகற்றி ஒற்றுமையான குடியரசை அமைக்க வழிவகுப்போம். இனத்திற்கிடையே பாகுபாடு காட்டாது சகலரும் ஒற்றுமையாகசெயலாற்றி இந்தநாட்டிற்சோஷலிஸப் பாதையில் குடியரசை உருவாக்க உதவவேண்டும்.

பலாலியில் வரவேற்பு

பலாலி விமானநிலையத்தில் அமைச்சருக்கு அமோகமான வரவேற்பளிக்கப்பட்டது. அரசாங்க அதிபர் அமைச்சரை மலர்கள் கொடுத்து வரவேற்றார். மயிலிட்டி கிராமசபைத் தலைவர் மாலை சூட்டி வரவேற்றார். தமிழ் தமிழ்காங்கிரஸ் எம்.பி.க்கள் வாழ்.மேயர் திரு. துரையப்பா திரு.ஜெயபாலசிங்கம் திரு. எஸ். விநோதன் உடபட பெருந்திரளானோர் கலந்து கொண்டனர்.

அமைச்சர் குமாரசூரியர் விமானநிலையத்தில் தமக்கு ஏற்பட்டவரவேற்பின் போது கூறியதாவது:- இந்நாட்டில் வாழும் தமிழ் மக்களுக்கு மரியாதையளிக்கும் வகையில்தான் எனக்கு இப்பதவி மீண்டும் வழங்கப்பட்டுள்ளது. மக்கள் அரசு தமிழர் மீது வைத்துள்ள நம்பிக்கை இச்செய்கையினால் எடுத்துக்காட்டப்பட்டுள்ளது.

ஆடல்கொண்டு நற்பணி நிதியுதவிநிகழ்ச்சிகள் பல அளித்துவரும் செல்வி மாலதி தர்மாவின் இந்த நேர்கொண்ட பார்வை கலை இறை சேவைக்குரியது என உறுதிகூறுகிறது போலும்!

சுவீப் முடிவுகள்

கொழும்பு, ஞாயிறு நேற்று இழுக்கப்பட்ட தேசிய லொத்தர் சபையின் 332-வது சுவீப் சீட்டிழுப்பு முடிவுகள் வருமாறு:

முதலாம் பரிசு

23 Q 0964	82,980

இரண்டாம் பரிசு

17 S 0582	33,192

மூன்றாம் பரிசு

02 M 0042	8,298

தலா ரூ. 414-90 சதம் குறுக்கு பரிசு பெறும் 100 டிக்கெட்டுகள் வருமாறு:

08 A 0792	34 A 0288
06 B 0336	24 B 0393
26 B 0155	32 B 0598
05 C 0851	26 C 0248
04 D 0455	06 D 0490
07 D 0772	27 D 0632
31 D 0636	31 D 0849
36 D 0685	08 E 0067
08 E 0168	19 E 0960
23 E 0149	26 F 0111
32 E 0020	02 F 0982
06 F 0735	12 F 0228

12-ம் பக்கம் பார்க்க

மூன்றுமைல் சுற்றளவுக்குள் டாக்டர்கள் வசிக்கவேண்டும்!

கண்டிப்பான உத்தரவு

கொழும்பு, சனி

அரசினர் ஆஸ்பத்திரிகளில் கடமையாற்றும் டாக்டர்கள் இனிக் கண்டிப்பாக மூன்று மைல் சுற்றளவுக்குள் வசிக்கவேண்டும். அவர்கள் கடமையாற்றும் இடத்திலிருந்து மூன்று மைல் சுற்றளவுக்குள் வசிக்கவேண்டுமென்ற நிபந்தனையிலிருந்த போதிலும் சரியாக அது அனுஷ்டிக்கப்படவில்லையாம். டாக்டர்கள் அங்கமையில் வசிக்காததால், நோயாளிகள் பலத்த கஷ்டத்துக்குள்ளாவதுடன், வேறு தனிப்பட்ட வைத்தியசாலைகளை நாடவேண்டிய நிலையும், அவர்களது உயிருக்கு ஆபத்தை ஏற்படக்கூடிய நிலையும் ஏற்படுகிறது என்று சுகாதார சேவை அதிபர் பேராசிரியர் ராஜகுரியர் கட்டிக் காட்டியுள்ளார்.

சத்திரசிகிச்சை, பிரசவம் முதலானவைகளையும், மருந்து கொடுப்பது போன்றவைகளையும் சம்பந்தப்பட்ட வைத்திய்ர்கள் கண்டிப்பாக 3 மைல் சுற்றளவுக்குள் வசிக்கவேண்டுமென்றும் அவசரமான அழைப்புகளின் போது அவர்கள் ஆஸ்பத்திரியில் சமுகமளிக்கவேண்டுமென்றும் ராஜகுரியர் தெரிவித்துள்ளார்.

இந்த நிபந்தனைகளை மீறுபவர்கள் கடமையிலிருந்து தவறுபவர்களாவார்கள் என்றும் அவர் எச்சரித்துள்ளார். (ச

யாழ் பொதுசன நூலகத்தில்

ஆராய்ச்சிப்பிரிவு நிறுவ ஆலோசனை சபை நியமனம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

யாழ்ப்பாணம் பொதுசன நூலகத்தில் ஆராய்ச்சிப் பிரிவொன்றை ஆரம்பித்து வைக்க யாழ்ப்பாணம்மேயர் திரு. அல்பிரட் துரையப்பா நடவடிக்கை எடுத்துள்ளார்.

இவ்விடயம் கலாச்சாரப் பேரவை நடத்திய தமிழ் இலக்கிய விழாவிற்கு வந்த நூற்சாலை அமைப்பாளர் திரு. ஆ.தேவராசன் ஆராய்ச்சிப்பிரிவொன்றை ஆரம்பிக்குமாறு மேயரிடம் கேட்டிருந்தார். இதைத்தொடர்ந்து மேயர் இதற்கான நடவடிக்கையை எடுத்துள்ளார். ஆராய்ச்சிப்பிரிவை அமைப்பதற்கு ஓர் ஆலோசனைச் சபையை மேயர் நியமித்துள்ளார். இந்தச்சபையின் யோசனைப்படி நூலகப் புனரமைப்பு விரைவில் ஆரம்பமாகும்.

ஆலோசனைச்சபை, உடுவிலூர் ஆலோசனைச் சபை, வெளியூர் விசேட ஆலோசனைச்சபை என பிரிக்கப்பட்டுள்ளது. உடுவிலூர் ஆலோசனைச் சபையில் 9 பேரும் வெளியூர் விசேட ஆலோசனைச்சபையில் 12 பேரும் இடம்பெற்றுள்ளனர்.

சிறந்த அலுமினியப் பாத்திரங்களுக்கு

நகல் அரசியல் திட்டம்

தமிழரிடையே கருத்து ஒற்றுமை

ஏழு காரணங்கள்: தலைவர் ஜி. ஜி. நாடு

திரும்பினார்: காங்கிரஸ் எம்.பிக்கள் நிலைமை

அரசியல் நிர்ணயசபை தயாரித்துவரும் நகல் அரசியல் திட்டத்தை ஒப்புக் கொள்ள முடியாதென்று, யாழ்ப்பாணம் விரசிங்கம் மண்டபத்திலே சென்ற வாரம்கூடிய அகில இலங்கை தமிழ் மகாநாடு ஏகமனதாக தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

அரசியல் சட்டத்தைத் தயாரிக்கும் வேலையைத் தொடர்ந்து நடத்தவேண்டுமென்று பிரதம மந்திரியையும் நாட்டையும் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். தங்கள் கோரிக்கைகளுக்குச் செவிசாய்க்காமல், நகல்திட்டத்தை அரசியல் நிர்ணய சபை தொடர்ந்து பரிசீலனை செய்து நிறைவேற்றினால், அத்திட்டத்தை நிராகரிப்பதென்றும் அம் மகாநாடு தீர்மானித்தது.

இம்மகாநாடு மட்டுமல்ல யாழ்ப்பாணம் நகரமண்டபத்திற்கூடிய தமிழரசுக்கட்சிக்கூட்டமும், புதிய அரசியல் நகல் திட்டத்தை நிராகரிப்பதென்று தீர்மானித்தது. யாழ்ப்பாணத்திற்மட்டுமல்ல கொழும்பிலே கூடிய ஒரு கட்டத்தில் சேர்ந்த குணவர்த்தனாவுமே கையில், நகல் அரசியல் திட்டத்தைக் குறைகூறி, அதை அவசரப்பட்டு நிறைவேற்றப்படலாகென்றும் மார்ச் மாதம் 28த் திகதி அதை அமுலுக்குக் கொண்டுவரவான ஒத்திப்போட்டு, அதைப் பற்றி புனராலோசனைசெய்ய வேண்டுமென்றும் கேட்டுள்ளார்.

நகல் அரசியல் திட்டத்தை நிராகரிப்பதற்கு, இவர்கள் வெவ்வேறு காரணங்களைக் கூறலாம். தமிழ் மகாநாடு ஏழு காரணங்களை இதற்குக் கூறியுள்ளது.

(1) நகல் அரசியல் திட்டத்தை விரிவான முறையில் விவாதிக்கவோ தேசிய அபிமானம், கேலைவரவு முதலியவைப்புகள் கிடைக்கவேண்டும். அரசாங்க ஊழியர் தீவெங்கும் கடமை மாற்றவேண்டியதால், இரு மொழிகளும் அவர்களுக்குத் தெரிந்திருக்கவேண்டும். இதனால் தேசிய ஒற்றுமையும் பலப்படும்.

(6) ஜனநாயக சமதர்ம சமூகத்திலே, எல்லாவற்றையும் விவாதித்து, முடிவுசெய்யக்கூடியவாய்ப்பு மக்களுக்கு இருக்கவேண்டும். மக்களுக்கு இருக்கவேண்டிய உரிமையை தேசிய சபையிலுள்ள தற்காலிக பெரும்பான்மையோருக்கு மாற்றிவிடமுடியாது. கிராமசபை அடிப்படையில், முன்காலத்தில் இருந்தது போல் நிர்வாக அதிகாரத்தைப் பரவலாக்கவேண்டும்.

(7) ஜனநாயகி தேசத்தால் தெரிவுசெய்யப்படவேண்டுமேன்றி பிரதம மந்திரியால் கூடாது.

இந்த ஏழு காரணங்களையும் விளக்கி, இந்தியாவில் செய்ததுபோல், கிராமவாரி அடிப்படையில் அரசியல் நிர்ணய சபையை அமைத்து இரு மொழிகளுக்கும் சம உரிமை அளித்து, தேசத்தின் ஒற்றுமைக்கான முறையில் மேலான அரசியல் திட்டத்தை அமைக்கவேண்டுமென்று கேட்டுள்ளனர்.

ஆனால் இந்த வேண்டுகோளுக்கு பிரதமர் செவிசாய்ப்பாரா? அல்லது அவசரமாக இந்நகல்திட்டத்தை நிறைவேற்றி, மார்க்சீய மாதத்தில் புதிய குடியரசு அரசியல் திட்டத்தை அமுலுக்குக்கொண்டுவரப் போகிறார்களா?

0 0 0

தமிழரசு எம். பி.க்கள், தமிழ் மாநாட்டுக்கு வந்திருந்தனர். ஆனால் தமிழ் காங்கிரஸ் எம். பி.க்கள் மூவரும் அதில் கலந்து கொள்ளவில்லை. தமிழ் காங்கிரஸ் கட்சியினர் வேறு கொண்டனர். தமிழ் காங்கிரஸ் எம். பி.க்களின் நிலைமை என்ன? தலைவர் ஜி. ஜி. பொன்னம்பலம் இலங்கைக்குச் சென்ற வாரம் திரும்பி விட்டார். அவர் சிலநாட்களில் யாழ்ப்பாணம்வந்து, தமிழ்காங்கிரஸ் சார்பாகத் தெரிவுசெய்யப்படமுன்று

கே. பி. ஹரன்

உங்கள் ரோமம்...

(4ம் பக்கத்தொடர்ச்சி)

உதிர்ந்த உரோமத்தையும் சந்தேகத்துக்கு இடமான வகையில் உரோமம் ஒன்றையும்மேலேசொன்ன ஆராய்ச்சிப்படி ஒப்பிடுப் பார்த்தால் சந்தேகம்தீர ஒரு சான்று கிடைக்கும்.

நோய் இன்னதென்று கண்டுபிடிப்பதற்கும் தமது ஆராய்ச்சிமுறை உதவக்கூடும் என்கிறார். டாக்டர் ஹரிஸன். ஒருவரது தலை முடியில் ஏதாவது ஒரு மூலகம் இருக்கவேண்டிய அளவுக்கு குறைவாகவாவது கூடுதலாகவாவது இருந்தால் உடம்பில் ஏதோ சோதாறு என்று ஊகிக்கலாம்.

டாக்டர் ஹாரிஸன் தலை முடியை எப்படி ஆராய்கிறார்? கிடைத்த தலைமுடி மீது அமிலங்களை ஊற்றுகிறார். கரிக்கட்டுப்பொடுக்களை அமிலங்கள் அகற்றிவிடுகின்றன. பின்னர் மீதிருப்பதைக் கிராபைட் கரியோடு கலக்கிறார். இந்தக் கலவை மின்விசை பாயக் கூடியதாகும்.

பின்னர் உயர் அழுத்த மின்விசையோடு ஒரு கணம் அதன் வழியாகப் பாயச் செய்கிறார். அப்பொழுது சுடர்விடும் அக்கலவையில் மாறுதல்கள் ஒரு புகைப் படத்தட்டில் பதிவாகின்றன. இக்கலைக் கம்ப்யூட்டரில் வைத்து ஆராய்ந்து இன்ன இன்னமூலகம் இன்ன இன்ன அளவுகளில் உள்ளன என்று கண்டுசொல்கிறார்.

பார்த்தால் மதிப்பிழந்த மயிர்! ஆனால் அது தலைக்கும் உண்மைகளோ...!

ஈழத்து தமிழ் ...

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

என்ற ஜெயராஜ். ஆனால் ஆகியோர் ஈழத்துத் திரையில் எதிர்காலத்தில் சக்கைபோடு போடப் போகும் நடிகர்கள் என்பதையும்—

தமிழ்நாட்டு நடிகைகளுக்கு சவால்விடக்கூடிய திறத்தில் 'என்றுமும் நடிக்க முடியும்' என்ற நாடிய லாபமயில் செல்வி லீலா நாராயணனையும்—

வி. எஸ். ரி. யின் 'குத்து விளக்கு' படத்தில் காணலாம்

படத்தின் வசனங்கள், பாடல்கள்— ஈழத்தின் பிரபல எழுத்தாளரான ஈழத்து சிவானந்தனுடையது!

ஈழத்துச் சினிமாவுலகில் புதியதொரு அத்தியாயத்தை தோற்றுவிக்கப் போகிறது "குத்துவிளக்கு" என்று பேசிக்கொள்வது என் காதுகளில் விழத்தான் செய்கிறது.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

[ஞாயிறு 13—2—72]

394 மீ. & 59 மீ.

செய்திகள்

காலை 6-30 பி.ப.12-45 மாலை 6-00 இரவு 9-00

காலை: 6-15 நாதாஞ்சலி, மங்கள வாத்தியம் 6-20 வரை நற்சிந்தனை, மு. ஞானப்பிரகாசம், 6-25 கிறிஸ்தவ நற்சிந்தனை, கி. எஸ். தேவ பாலசிங்கம், 7-00 பௌத்த நற்சிந்தனை, சங். ஸ்ரீ செல்ல தம்மவரத்தின தேரோ 7-05 துதிப்பாடல் 7-30 குரல் வகை 7-45மெல்லிசைப் பாடல்கள்; பாடல்கள் வாத்தியார் சத்தியசீலன் பாடுபவர்கள்; வி. மாணிக்க வேல், பாபு புவனேஸ்வரி. இசையமைப்பு: ஈழநாதன்ஊர்ரி வி. பிரசைப்பா. 8-00 தமிழோடிசை பாடல், நடத்துபவர் ஏ. கே. கருணாகரன். 8-15 மாலை சமயப் பேச்சு, "சிராத்திரிப் புராணம்" 9-00 மாத அதிதி, தயாரிப்பவர்; கிரேஷ்டர் பாலசுப்பிரமணியம் 9-30 நாறுக் இஸ்லாம் 10-00 நாடகம்-மனச்சாக்கி எழுதியவர் சிவக் 10-30 பெண்ணுலகம் தயாரிப்பு: ராஜேஸ்வரி சண்முகம். 11-15 கிறுவர்மலர்; வாக்கு, குக்கு நாடகம் - வானமதி. எஸ். திருநாவுக்கரசு. கதைப்பாட்டு விவேகத்தின் வெற்றி நடத்துபவர்; வாணெனி வாசு.

6-15 நாட்டுப் பாடல்கள் கி. இராமதம்பி; 6-30 வயலின் வி. சம்சுரப்பிள்ளை. 7-00 கதாநாயகிக் நிகழ்ச்சி நடத்துபவர்; சங். பிதா ஜோசேப் செல்வராசா. 7-30 வெளிநாட்டுச் செய்தி 7-35 உரைச்சித்திரம் "சக்கிலித்தோப்பு" சொக்கன் எழுதியது. 8-00 முஸ்லீம் நிகழ்ச்சி. 9-30 யார விருந்து தயாரித்தவிப்பவர்; கிரேஷ்டர் பாலசுப்பிரமணியம்,

தரம் அறிந்த அறிஞர்கள்
கோவிலிலும் விசேஷ வைபவங்களிலும்
விரும்பிப் பாவிக்கிறார்கள்
பத்திர மூலம் அரைத்தெடுத்த

சூரியன்' வியாபார சின்னமுடைய
சந்தனம்
தயாரிப்பாளர்கள்:-
நாஷனல் பெர்பியூமறி வேக்ஸ்
கிடைக்குமிடம்
சுந்தரம் பிறதர்ஸ்,
73, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம்.

பாடசாலைகளில் பின்தங்கும் மாணவர்களுக்கு
ஓர் அரிய சந்தர்ப்பம்
* சித்தி இன்றேல் கட்டணம் இல்லை.
விசேட போதனா வகுப்புகள் (Special Tuition Classes) ஆரம்பிக்கப்படுகின்றன.

க. பொ. த. (சாதாரணம்) 1972	J. S. C. 1972 (N. P. T. A.)
பௌதிகம், இரசாயனம், உயிரியல், எண்/ தூய/ உயர்தர / பிரயோக கணிதங்கள் ஆங்கிலம், தமிழ், சிங்களம்	1. புதிய கணிதம் 2. பொது விஞ்ஞானம் 3. ஆங்கிலம்

வகுப்பு நடைபெறும் நேரம்
பெண் பிள்ளைகளுக்கு: பி. ப. 4-00 மணி தொடக்கம் மாலை 6 மணி வரை.
ஆண் பிள்ளைகளுக்கு: பி. ப. 4-00 ,, ,, இரவு 8 ,, ,,
விபரங்களுக்கு நேரில் வரவும்.
கிறவுண் போதனா நிலையம், இல. 16, கண்டிவீதி, யாழ்ப்பாணம்.
(யாழ்ப்பாணம்-கச்சேரி பஸ் பாதையில் அமைந்துள்ளது.)

நீங்காத நினைவு

அம்மா, அம்மா... என்று அலறிக் கண்ணன் என் மீது சாய்ந்து கொண்டான். கண்களில் கண்ணீர் வழிந்தோட கதறிப் மிகுதியாக உறக்கம் கொண்டு விட்டான். அவனையே பார்த்த வண்ணம் என் அன்பு மனைவியை வாழ்ந்தாலும் ஒன்றாய் வாழ்வோம் பிரிந்தாலும் ஒன்றாய்ப் பிரிவோம் என சபதம் செய்து கைப்பிடித்த என் கண்ணுக்கினியவளை வாழ்க்கைப் பூஞ்சோலையில் தனியாளாய் வந்தவளை எண்ணி எண்ணி ஏங்குகிறேன். கடந்த காலங்களுக்கிடையே ஒரு நாள் அதே கட்டிலில் நிறைமாதக் கர்ப்பிணியாய் அழகெல்லாம் ஒன்றாக உருவெடுத்த பேதையாகக் கிடந்தாளே! மன்னன் தலையைத் திறந்து தென்றல் காற்று உடலுக்கு ஏற்றது என்று சொல்லி காற்று வாங்கிய வண்ணம் எதிர்கால வாழ்க்கைக்குத் திட்டம் தீட்டினாளே!

இன்றோ நீ என்னை விட்டுப் பிரிவதற்கிடையே இவ்வளவு தூரம் நெருங்கிய அன்பை வளர்த்தாய் அன்புச் செடிக்கு அறிவு பசளையையும் இன்பக் கண்ணீரையும் சொரிந்து வளர்த்தாயே! அது இன்று விட்டுப் பட்டர்ந்து கொத்துக் கொத்தாய் மொட்டுக்களை பரப்பி நின்ற போது யாரோ ஒருவன் காணாமல் பறித்துச் சென்ற மலராக மாறிச் சென்று விட்டதே!

என் வாழ்வில் ஒளி விளக்காக வந்த குத்து விளக்கே இப்படி என்னை விட்டுப் போவாய் என்று நான் கனவில் கூட எண்ணவில்லை. ஐந்து வயதுச் சாந்திக்கும் மூன்று வயது பாபுவுக்கும் அம்மா கோயிலுக்குப்போய் விட்டாள். நீங்கள் படுங்கள். வருவா என்றெல்லாம் பொய்யை மெய்யாகக் கூறி உறங்க வைத்து ஏமாற்றுகிறேன்! இனி எந்த நாளைக்கு இப்படி சொல்லி ஏமாற்றுவது? கண்ணனோ ஒன்றரை வயதுப் பாலகன். ஒன்றும் அறியாத பிஞ்சு உள்ளம் தாயின் நிழலில் வளர்ந்தவன். தாயின் பிரிவை எப்படிப் பொறுப்பான்? ஐயோ நான் இந்தப் பாதகச் செயலை அனுபவிக்க வா பிறந்தேன். என் கண்ணே! நீ எங்கு போய் விட்டாய்! ஆகிலாவே என்று அழைக்கும் போது ஆகிலம் எல்லாம் உன் காலடியில் கிடப்பது போல் இருக்கும். ஆகிலா என்று கூப்பிட்ட வாயால் இனி யாரையும் கூப்பிட மாட்டேன். எல்லோரையும் கவலித்தலையின்றி எண்ணிய வாறு ஈசிச்சேரில் கிடந்த என்னை என் தாய் அன்புத் தாய்மெல்லத் தட்டும் சத்தம் கேட்டுத் திடுக்கிட்டேன். கண்ணனை தன்னுடன் கிடத்திக் கொண்டு தூங்குவதாகக் கூறி அம்மா தன் அறைக்குச் சென்று விட்டாள்.

எல்லாரும் துன்பச் சுழலில் உறங்கிக் கொண்டிருந்தார்கள். நான் உறங்கவும் இல்லை, விழிக்கவும் இல்லை. கடை நடுவில் இருந்த தந்தி வந்தக் கொண்டிருந்தார்கள் வாழ வேண்டும். எதுவுமோ திட்டங்கள் நிறைவேற்ற வேண்டும் என்றெல்லாம் கற்பனைக் கோட்டை கட்டியிருக்கும் போது இப்படியான திடீர் தாக்குதல்கள் எம் உறவுகளுக்கு நெஞ் வார்த்த நெடுப்பாக அமைவா ஆகி றது.

டாக்டர்கள் குழந்தை நாளைக்கு மாலை 2 மணியளவில் பிறக்கும் என்று சொல்லி எனக்கு வாக்குறுதி தந்தார்கள். 'தந்தாய் ஆபிசுக்கு லீவு போடவேண்டாம் போய்வாருங்கள்' என்று கூறினாயே! அப்போது பல்லியின் சத்தம் என்னை ஏதேதோ எல்லாம் நினைக்க வைத்தது. ஆனால் சாந்தி ரத்தை முறியடித்து தந்த உன் பேரன் நீ. தந்தாய் இதற்கெல்லாம் பயப்படுகிறீர்களே! குழந்தையாக மாறுகிறீர்களே! என்று என்னைக் கேலி செய்து தனுப்பினவளாயே! ஆபிசில் வேலைசெய்யும்போது எல்லாம் உன் நினைவு மிகவும் என்னைத்தாக்கிற்று ஏதோ டாக்டர்கள் உன்னைப் பற்றி தங்களுக்குள் பேசிய பேச்சுக்

திடீரென்று நோக்கி கொண்டுபோய்விட்டார்கள் என்பதை உணர்ந்தேன். என்னை அறியாமல், ஓடினேன் அங்கே. மிகுந்த போராட்டத்தின்பின் செய்தி பிழைத்தது —தாய்... என்று இழுத்த வண்ணம்..... செய்தியைக் கேட்டேன். அவ்வளவுதான் பக்கத்திக் நின்ற தூணில் தலையை மோதினேன்.

பிறகு நடந்தது என்ன என்றே தெரியாது. மனைவியை மனையில் இருந்தும் கடுகாட்டிற்கு கொண்டு செல்ல வாகனம் முன்நின்றது. எல்லோர் முகத்திலும் கவலை குடிகொண்டிருந்தது. சுடுகாடு நோக்கி நானும் நடைப்பிணமாகச் சென்றேன். உயிரற்ற உடலை சொழுத்தும் வெயிலில் நின்று தீ மூட்டினர் என் அன்பு தன் இடத்தினின்றும் அணு அணுவாகப்பிரிந்து கொண்டு போகிறாள் என்பதை அவ்வையம் காட்டியது. உயிருடன் சமைக்கும் போது அல்லது மண்ணெண்ணெய் விளக்கு தவறுதலாக கையில் கட்டுவிட்டால் சிவப்புநிற மேனியில் கொப்புளம் தெரியும்போது நாவல் பழம்போல் இருக்குமே. அவ்வளவு வேதனை அடைந்தாலும் அவை வெளிக்காட்டிக் கொள்ள மாட்டாயே, அந்தாள் இது என்ன பெரிய நோவா இந்த. வாழ்ந்து மடியும் உலகத்திக் தெடுப்பிலும் கொடிய வெயிலில் வை இழந்த. கண்ணிழந்து, நாக் இழந்த, தவிப்பவர்களும் எம்போன்று பத்து மாதம் சுமந்து பெற்றெடுத்த ஜென்மங்களே, அவை அவ்வெயிலில் தான் தங்கள் வாழ்வைக் கழிக்கவோ என்னிப்பிறந்தவர்கள். காலச் சக்கரம் அவர்களை இந்த கலப்புலகில் வாழும் உலகத்திக் ஒதுக்கிவிட்டது' என்றெல்லாம் ... எத்தனையோ தத்துவம் பேசி, உன் அறிவுத் திறமையை வெளிக்காட்டுவாயே, ஆனால் இன்றோ உயிரென்று அந்த ஒரு பொருள் உன் உடலில் இல்லாததால் இந்த வெயிலில் கொழுந்தப்பட்டு தூக்கி எறிகிறார்கள் பலரி மாறிவிட்டாயே அகிலா என்னைவிட்டு எங்கு வாழ்வில் நாம் ஒற்றுமையாக வாழ்ந்தோம் என்பதை உலகு அறியவைக்கும் கண்ணன் நான்கு குழந்தைகளை பிரிந்து சென்று பல மாதங்களாகின்றன.

படுக்கை அறையில் இருந்தும் 'அம்மா, அம்மா' என்ற கண்ணன் கிடாக அழுது கேட்கிறது. திடீரென ஒன்று என் உடலில் பாய என் விழிக்கிறேன் ஐயோ நான் இவ்வளவுதூரம் கனவுலகில் பின்னிப்பிணைந்திருந்தேனே, என எண்ணி நெஞ்சு ஏங்குகிறது. எழுந்து சென்று கண்ணனைத் தோளில் போட்ட வண்ணம் வராந்தாவில் உலாவுகிறேன், நானும் மனையியும் ஜோடியாக எடுத்த படம் பளிச்சிடுகிறது. அதில் அவன் என்னைப்பார்த்து, 'தந்தான் உங்களைப்போன்ற எத்தனையோ கோடி ஆட

[10-ம் பக்கம் பார்க்க]

தேன். பழைய நினைவுகள் நெஞ்சில் திரையிட்டுக் கொண்டிருந்தன.

காரியாலயம் போகும் போது என்னை வழியனுப்பி விட்டு சாந்தாவை 'நர்சரி' பள்ளிக்கு அனுப்பி விட்டு தன் கடமைகளை முடித்து மதிய போசனத்தை வேலைக்காரியிடம் கொடுத்துவிட்டு மாலை டியூனுடன் என் வரவைக் காத்துக் கொண்டு மூன்று குழந்தைகளுடன் வயிற்றில் இன்னொரு செல்வத்தையும் வைத்துக் கொண்டு நிற்கும் காட்சி தெரிகிறது. அந்தான் மாரி மாசிக் குளிர் உடலை மிரவும் வாட்டும். இதைக் கொண்டு உங்கள் உடலைப் போர்த்துக் கொள்ளுங்கள். என்று அலுமாரியில் யாரும் விருந்தினர்களை வைக்கப் பட்டிருக்கும் விஷேச போர்வைகளை எடுத்து நீட்டுவதும் 'பிளாஸ்கில்' சுடப்பிபோட்டு என் 'மெடி'டுக்குக் கீழே வைப்பதும் போன்ற இரவுக் கடமைகளையும் நினைக்கும் போது என்னை வாட்டிற்று

எத்தனையோ பேர்கள் சாட வரவில்லை. என்று வருந்திக் கொண்டிருக்கும் போது எங்களைப் போன்ற

அகிலா நீ, இப்படி போவாய் என்று உனக்கு உண்மையில் தெரியாதா? தெரிந்திருக்க வேண்டும்! அன்று 'கொஸ்பிரலுக்கு' பிரசவத்தைவிட்டுப்போகும் போது வீட்டில் உள்ள அத்தனை உயிர்களிடமும் விடை பெற்றுக்கொண்டு புறப்பட்டாய். நாவையடக்கிக்கொடுத்தாய் வேலைக்காரி இலட்சுமிக்கு முதுகிக்கட்டி விடை கேட்டாய். சாந்தாவையும்

'தவம்'

பாபுவையும் மனமார முத்தமிட்டாய். மாமிக்கு உன் அன்புக்குரியவைப்பொழிந்தாய். வரைந்தபடியவர் கடக்கும்போது வீட்டை இருக்கண்களாலும் தழுவிப் பார்த்தாய் இனி உயிருடன் இந்த மாளிகையில் திரும்பிவர மாட்டேன் என்பதற்கா கவா அப்படிப் பார்த்தாய்! அன்று, அவை எனக்கும் புரியாத புதிராக இருந்தன. இன்று பார்க்கும்போது எல்லாம் நினைத்துச் செய்தவை போலாகிவிட்டதே! உன்னை வாரிட்டில் அனுமதித்து

கண் என்னை சித்திக்கச் செய்தன நீ ஒன்றும் அறியவில்லை. அன்புச் செல்வியாக வளர்ந்த நீ, மென்மையுள்ளமும் உடலும் இயற்கை உனக்கு அளித்தவை என்று நான் சாதிக்கும் போது எல்லாம் வாய்ப்பேனே? அப்படிப்பட்டநீ, ஏறுமாறு அற்ற இன்ப வாழ்க்கையில் வாழ்ந்த வந்தமையால் உன் உடல் சொகுசாக வளர்ந்தது சரிப்பிளியானபோது இன்றும் தளரவந்து பெண்மையின் தாய்மையின் சோதனையை சோதனைபோடுக்காட்டியது. ஆதலால் நீ பிரசவத்திற்குகடிய இரத்தமும் உடலில் சாணப் பட்டது. இதையே அவர்கள் தங்களுக்குள் பேசியது பின்னுதானே எனக்குத் தெரியவந்தது.

இப்படியான எண்ணங்களுக்கூடே மும்முரமாக வேலைசெய்து கொண்டிருக்கிறேன் பி-ஒன் ஓடிவந்தார். ஐயா உங்களை உடனேயே படி போன் வந்திருக்கிறது என்றார். காதில் சொற்கள் விழுந்தன. உண்மைதான். ஆஸ்பத்திரியில் மனைவியை அனுமதித்துவிட்டு வந்த காரியி கண்முன் நின்றது. கார் எடுத்துக்கொண்டு ஓடினேன். ஓடவிக்கை பறந்தேன். பகல் பன்னிரண்டு மணி. கொழுத்தும் வெயில். பனிரண்டுக்கும் வைத்திய சாலைக்குமிடையே மக்கள் புழுவுவ்த் துடித்துக்கொண்டிருந்தனர். அவர்களுக்காக நான் ஒருவன் பச்சாதாபப் பட்டு என்ன செய்யமுடியும்? காரை வாசலில் நிறுத்தி மருத்துவ மனையை நோக்கி ஓடினேன். அந்தோ குழுமி நின்ற என் மனையியின் சகோதரர்களும் பக்கத்து வீட்டாரும் என்ன நடந்துவிட்டது என்பதைச் சொல்லாமல் சொல்லிவிட்டனர்களே உருவாக நின்றார்கள். ஆம், என் மனையாகிய கடும் கேஸாக ஆப்பிரேஷன்

மோட்சம் யாருக்கு?

புழ்ழுத்த மூன்று புலவர் பெருமக்கள் ஒருமர நிழலிலேயிருந்து தாங்கள் கற்றவற்றைப்பற்றிப் பேசிக்கொண்டிருக்கிறார்கள். இவர்களில் ஒருவர் நாம் மானிடப் பிறவி எடுத்ததன் பயன் மோட்சம் எய்துவதற்கே என்றார்.

'மோட்சமடைவதற்கு நாமே சாஸ்திரங்களெல்லாம் கற்றறிந்தேறியுள்ளோம்' என்றார் மற்றப்புலவர்.

ரத்திவ்யப் பிரபந்தத்தையும் அவற்றின் பாஷ்யங்களையும் படித்துக்கரைகண்டிருக்கிறேன். ஆகவே எனக்கு மோட்சம் உறுதி யாக்கிடைக்கும். உமக்கு முன்பே கிடைத்தாலும் கிடைக்கலாம்' என்றார்.

மூன்றாவது புலவர் இப்பாது பேசினார்:- நீங்கள் வடமொழி, தமிழ்மொழி வேதங்களைக் கற்றதாகக் கூறினீர்கள் நானும் வேதோப நிஷத்துக்களைப் படித்துக் கரைகண்டி டேபோனேன்.

புலவர்கள் மூவரும் திடுக்கிட்டு, அந்தப் பெண்மணியிடம்சென்று, தாயே நீ என்ன படித்திருக்கிறாய்? எங்களிடம் அதிகம் படித்திருக்கிறாயா? நீ எப்படி மோட்சம் போவாய்?' என்று கேட்டார்கள்.

'நான்மோட்சம்போவேனென்று சொல்லவில்லையே! நான் போனால் போகலாம் என்றேன்' என்றாள்.

'அதற்கு என்ன அர்த்தம்? நீ மோட்சம்போவாய் என்பது தானே?' என்று மறுபடியும் கேட்டார்கள்.

'இல்லை, இல்லை 'நான்' என்ற அகம்பாவம் போனால் மோட்சம் போகலாம் என்றுதான் சொன்னேன்' என்று விளக்கினாள் அந்தப் பெண்மணி.

அதைக்கேட்ட மூவரும் நாணி அவள் காலில் விழுந்தனர். —முருகன்

தம்பி அன் கோ.

முப்பதாவது ஆண்டில் ஜுபிலி சேமிப்பிற்கு
(Jubilee Deposits)

ரூபா 1000/-க்கு ரூபா 1000/- வட்டி
ஆறு ஆண்டின் பின் கொடுக்கப்படும்

இடையில் எடுத்தால் வருடம் 8 சதவீத வட்டியுடன் கொடுக்கப்படும்,

மற்று விபரங்களுக்கு:

தம்பி அன் கோ.
வண்ணார்பண்ணை — திருநெல்வேலி
யாழ்ப்பாணம்.

ஐரோப்பிய பொதுச் சந்தையின் பொருளாதார ஐக்கியம்

பிரிட்டன் சென்றமாதம் ஐரோப்பிய பொதுச்சந்தையில் அங்கத்துவம் பெற்றுள்ளது. இக்கூட்டணிகளிலுள்ள மற்ற நாடுகள் பிரான்ஸ், மேற்கு ஜெர்மனி, இத்தாலி, பெல்ஜியம், நெதர்லண்ட்ஸ், லக்ஸம்பேக் ஆகியன.

இலங்கை அரசியல் சாசனத்திருத்தம் பெறுவதற்கு முன்பு அதன் பாகங்களைப் பொறுக்கி எடுப்பதைப் பிரிட்டன் முதலிய ஐரோப்பிய நாடுகளிலிருந்து இறக்குமதிசெய்யப்பட்டன. ஆங்காங்கு தேவைகளுக்கு அவசியமான தீப்பெட்டி, துணிமணிகள், சோப், எண்ணெய், பீங்கான் சாமான்கள், சைக்கிள், கார்கள் இவற்றின் உதிரிப் பொருட்கள், பிளேட் முதலிய ஆநேக பொருட்களுக்கு வெளிநாடுகளையே நம்பி விருந்தோம். எமது ஆசிரியர்களின் சொற்படியே நமது ஏற்றுமதி இறக்குமதி வர்த்தகம் நடந்து வந்தது. கண்டியிலிருந்தும் ரப்பர் மூலப்பொருளாக இங்கிலாந்துக்குப் போய் அங்கிருந்து டயர்களாகவும், டியூப்களாகவும், வேறு ரப்பர் சாமான்களாகவும் திரும்பி இலங்கைக்கு வந்தது. வைத்தொழில், வந்திரத்தொழில்களில் முன்னேற்றமடைந்திருந்த இந்நாடுகள் தாங்கள் உற்பத்தி செய்யும் பொருட்களை இலங்கைபோன்ற குடியேற்ற நாடுகளிற் கொண்டுவந்து கொட்டின.

ஆசியாவிலும் ஆபிரிக்காவிலும் ஐரோப்பிய வல்லரசுகளுக்கு பல குடியேற்ற நாடுகள் இருந்தன. பிரிட்டனுக்கு இந்தியா, இலங்கை, பர்மா, மலாயா முதலியனவும், பிரான்சுக்கு இந்தச்சீனமும், ஒல்லாந்துக்கு இந்தோனேஷியாவும், பெல்ஜியத்துக்கு கொங்கோவும் தங்கள் உற்பத்திப் பொருட்களைக் கொண்டுவந்து குவிப்பதற்கு ஏற்ற சந்தைகளாகவிருந்தன.

2-வது உலக யுத்தம்

இரண்டாவது உலகமகா யுத்தம் இந்த நிலைமையை மாற்றிவிட்டது. முன்புகுடியேற்ற நாடுகளாயிருந்தவை அரசியல் சுதந்திரம் பெற்றுக்கொண்டவுடனே தங்களுக்குத் தேவையான பல பொருட்களைத் தாமே உற்பத்தி செய்துகொள்ள ஆரம்பித்தன. பிறநாடுகள் இறக்குமதிகள் குறைக்கப்பட்டன. உள்ளூர் உற்பத்திக்கு ஊக்கமளிக்கப்பட்டது. இதன்பலனாக மேற்படி ஐரோப்பியநாடுகள் தங்கள் உற்பத்திப் பொருட்களை விற்பனைசெய்வதற்கு சந்தைகள் போதுமானவை கிடைக்கவில்லை. குடியேற்ற நாடுகளில் தாங்கள் நினைத்த விலைக்கு சாமான்களை விற்கலாமென்று அவற்றையே நம்பியிருந்த இவ்வைரோப்பிய நாடுகள் தமக்குள்ளே வியாபாரத்தை பரஸ்பரம் விருத்தி செய்துகொள்ள நினைக்கவில்லை. சக்தி விதிகளும் வரிகளும் பிரயாணக் கட்டுப்பாடுகளும் இதற்குத் தடையாக நின்றன.

1957-ல் ஆரம்பம்

இந்தத்தடைகளை அகற்றி மேற்கைரோப்பிய நாடுகள் மேலே கூறப்பட்ட ஆறு ஐரோப்பிய நாடுகளுமே இதில் அங்கம் வகித்தன. பிரிட்டன் தானும் இதில் சேர்ந்துகொள்ள முயன்றும் பிரான்ஸின் ஜனாதிபதியாகடி கோல் இருக்கும்வரை சேர முடியவில்லை. பிரிட்டனுடைய உற்பத்திப்பொருட்கள் வந்து குவியத் தொடங்கினால் தங்களுடைய பொருட்களுக்கு கிராக்கி இல்லாமல் போய் விடும் என்று நினைத்தோ, அல்லது அரசியல் காரணங்களுக்காகவோ பிரிட்டனின் சேர்க்கையை டி கோல் கடைசி வரை எதிர்த்துவந்தார். இப்பொழுது டி கோல் இல்லாதபடியால் பிரிட்டனும் ஐரோப்பிய பொதுச்சந்தையில் சேரமுடிந்திருக்கிறது.

வியாபாரத்தில் ஒரே குடும்பம்

சுமார் இருபதுகோடி மக்களுக்குமேல் வசிக்கும் இந்த ஏழுநாடுகளும் வியாபாரத் துறையில் இன்று ஒரேகுடும்பமாக இருக்கின்றன. 1958க்குப்பின் உலகவர்த்தகம் அமோகமாகக் குறைவாகவே அதிகரித்திருக்கிறது. ஆனால் இந்த ஏழு நாடுகளிடையேயும் முன்னிருந்ததைவிட இரட்டிப்பாகியிருக்கிறது.

இத்தாலியின் நகரங்களில் இன்று ஜேர்மன் கார்கள் ஓடுகின்றன. ஒல்லாந்தின் கடைகளில் இத்தாலிய விலை யாட்டுப் பொருட்கள் இடம் பெற்றன. பிரெஞ்சுக்காரர் ஜேர்மன் பியர் அருந்துகிறார்கள். பிரெஞ்சு தளபாடங்கள் ஜேர்மனியில் விடுகின்றன. இவிமேல் பிரிட்டிஷ் பொருட்களை மேற்கைரோப்பிய நாடுகளிலும், மேற்கைரோப்பிய பொருட்களை பிரிட்டனிலும் தாராளமாக வாங்கிக்கொள்ளலாம்.

தடைகள் குறைவு

ஒருநாட்டின் எல்லையைக் கடந்து மற்றொரு நாட்டுக்குள் பிரவேசிப்பதற்கு இப்பொழுது வாங்கப்பட்ட முதலிய பிரயாணத் தடைகள் குறைந்து விட்டன. எவர் வேண்டுமானாலும் எந்த நாட்டுக்குப்போய் வியாபாரம் செய்யலாம். இறக்குமதி கோட்டாக்கள் அகற்றப்பட்டுவிட்டன. நிர்வகிக்கும்படிப்படியாகக் குறைக்கப்பட்டு வருகின்றன. மூன்று நான்கு ஐரோப்பிய மொழிகள் பேசக்கூடிய வர்த்தகர்களும் பாமரர்களும் ரோம், பாரிஸ், பிரஸல்ஸ் முதலிய நகரங்களுக்குப் பறந்துசென்று ஐரோப்பிய பொதுச்சந்தையின் வர்த்தகத்தைப் பெருக்கி வருகிறார்கள்.

பிரெஞ்சு, ஜேர்மனி இத்தாலிய மோட்டார் உற்பத்தியாளர்களும், உணவு சாப்பிடுபவர்களும், சொகுசுப் பொருள் உற்பத்தியாளர்களும் வியாபாரத் துறையில் ஒருவரோடொருவர் போட்டிபோட்டு, தனி ஏக போக உரிமைகள் பாராட்டாமல் ஒருவர்பொருளை மற்றவரும் விற்று கூட்டுறவை வளர்க்கிறார்கள். இந்நாடுகளுக்கு பிரதான ஏற்றுமதி துறைமுகமாக விளங்கும் ரொட்டர்டாம் என்ற ஒல்லாந்து துறைமுகம் வருடந்தோறும் கோடானுகோடி ஐரோப்பிய பொருட்களை வெளிநாடுகளுக்கு அனுப்பி வருகிறது.

ஐரோப்பிய பொதுச்சந்தையின் தலைமைக் காரியாலயம் பிரஸல்ஸ் நகரில் இயங்குகின்றது. ஏழுநாட்டுப் பிரதிநிதிகளும் இங்கு வாரமொருமுறைகூடி கலந்தாலோசனை செய்கிறார்கள். தொழில் சங்கங்கள் ஆகிய அதற்கு ஏழு நாடுகளுக்குமிடையே ஒற்றுமை உண்டுபண்ணுவதற்காக ஆவன செய்துவருகிறார்கள்.

பிரிட்டிஷ் பொதுநல நாடுகளைப்போன்ற இந்த ஐரோப்பிய பொதுச்சந்தையின் பொருளாதார ஐக்கியம் எதில் அரசியல் ஐக்கியத்துக்கும் அடிகோலக்கூடுமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

செய்தியின் பின்னணியில்

வழிப்போக்கன்

மீன் பிடிக்க வசிய வித்தை

இருக்கையில் தூண்டிலேன்?

தூண்டிலும் வலையும் எதற்கு? தூரப் போடுங்கள் இனி மீன் பிடிக்க வசிய வித்தையைக் கற்றுக் கொள்ளுங்கள்.

மீன் பிடிப்பதற்கு அமெரிக்கத் தேசியக் கடலியல் மீன் வளப்பணிப்பிரிவு (என். எம். எவ்ப். எஸ்.) புதிதாக வோசனை கறியிருக்கும் ஒரு வழி, வசிய வித்தை.

மீன்களை வலைக்கு இழுக்க என். எம். எவ்ப். எஸ். ஒரு மிதவை மேடையைப் பயன்படுத்தும் திட்டம் வகுத்துள்ளது. மேடையின் அடியில் நீருள் மூழ்கிய வண்ணம் பாதரச வாயு மின் விளக்குகள் இருக்கும். இவற்றின் ஒளி மீன்களை வலைக்கு வரவழைக்கும். ஒரு மேடையினால் ஒரு லட்சம் சார்டின் மீன்களை வலைக்கு இழுத்து விடலாம் என்கிறார்கள்.

விட்டு விட்டுப் பாயும் மின் விசையானது மீன்களை ஒரு சேர வலைக்கு, நீருக்கடியிலுள்ள குழாய்களை நோக்கிக் கவர்ந்து இழுக்கும் குழாய்களின் வாயினுள் வந்தவை மேலே படகுக்குள் இழுக்கப்படும். அங்கு தானே இயங்கும் பொறிகளால் அவை பதனப்படுத்த

உங்கள் தலைமுடியில் ஒரு சிறுதுண்டு தேங்காய்த்தட்டு கொடுங்கள்! நீங்கள் சாப்பிடுவது என்ன, வாழும்சூழ்நிலை எப்படி என்பதையெல்லாம் நிரம்பக் கண்டு பிடித்துவிடலாம் -என்கிறார் அமெரிக்க விஞ்ஞானி ஒருவர்.

"தலைமுடி உடம்பின் குப்பைமேடு" என்கிறார் டாக்டர் வில்லார்டு டபிள்யு ஹாரிஸன். வெர்ஜீனியா மாநிலத்திலுள்ள சார்லஸ்டன் ராணுவத்தரை இணைப் பேராசிரியர் இவர்.

"எல்லாவகையான மூலகங்களிலும் மிஞ்சியது அங்கு சேர்ந்து வைக்கப்பெறுகிறது: 'ஸ்பார்க் ஸோர்ஸ் மாஸ்பெக்ட்ரா மீட்டர்' என்னும் கருவியினால் ஆராய்ந்தால், மிகநுண்ணுயவளவில் தலைமுடியிலுள்ள 35 அல்லது 40 வகையான மூலகங்களின் அறிகுறிகளை ஒரேசமயத்தில் கண்டுகொள்ளலாம்."

எடுத்துக்காட்டாக, மனிதனது உடம்பில் வெள்ளி, தாந்தரம், வெள்ளீயம் போன்ற உலோகங்கள் சிறிது இருப்பது வழக்கம். அவை எவ்வளவு எவ்வளவு

உங்கள் ரோமம் உங்கள் தூழலைச் சொல்லும்

என்பதெல்லாம் ஆராய்ந்தறியப்படும், என்றுதெரிவித்திருக்கிறார் டாக்டர் ஹாரிஸன்.

கண்ணில் ஒருவன் கண்ணாடிய இடத்தில் தலைமுடி ஒன்று விழுந்து கிடக்கிறது என்று வைத்துக்கொள்வோம். உதாரணத்தும் ஓர் ஆங்கில சந்தேகம். அந்த

(11ம் பக்கம் பார்க்க)

வளரும் விஞ்ஞானம்

பழையன கழிதல் அவசியமா?

பழையன, பழுதானவை குப்பைகள் எனக்கூறி இன்று நாம் எதையும் ஒதுக்கிவிட முடியாது. விஞ்ஞானத்தின் வித்தையால் பழையனவெல்லாம் புதியனவாக்கப்படுகின்றன. தற்போது பயன்படுத்தப்படுகிற வாகனத்தை கழாக வாற்றிப் புதுக்காகி தந்தயாரிக்கின்றனர்.

செலுலோஸ் கழிவிலிருந்து வேதாசி தயாரிக்கப்படுகின்றது என்பதைப் பலரும் அறிவர். பயன்படுத்தப்பட்ட தினசரிகள், வார மலர்கள், மாதசஞ்சிகைகள் முதலியவற்றைசெலுலோஸ் கழாக மாற்றுவோமேயானால் அவற்றைப் புதிய காகிதமாக மாற்றிவரலாம். பழைய காகிதங்களைப் புதிய தாள்களாக மாற்றலாம். இவ்வாறு செய்தால் குப்பையின் தொல்லைகளும் ஒழிந்துபோகும். இதனால் சமூகத்துக்குப் பல நன்மை கிடைக்கும். அமெரிக்க ஐக்கிய நாடுகளில் 25 வீதமும், ஆஸ்திரியாவில் 35 வீதமும் ஜப்பானில் 45 வீதமும் பழைய காகிதம் புதுக்காகிதமாக்கப்படுகின்றன. நகரங்களில் காணப்படும் குப்பைகளில் பாதிப்பகுதி காகிதம்ஆகும். இக்காகிதத்தில் பெரும்பகுதி செய்தித் தாள்களாகவே இருக்கும். இவற்றைப்பிரித்து புதுக்காகிதமாக்கலாம். மேலை நாடுகள் சிலவற்றில் செய்தித்தாள்களைக் குப்பையிலிருந்து பிரித்துத், தனியாகத் தரும்படி மக்களைக்கேட்டுள்ளன. உதாரணமாக மேடிசன் நகரில் குப்பை எடுக்கும் லாரிகள் செய்தித்தாள்களை பிரித்தெடுத்துக்கொள்கின்றன. இதற்காகப்புறம்பான தொட்டிகளும் இங்கு கட்டப்பட்டுள்ளன. நியூ ஜெர்ஸி நகரில் செய்தித் தாள்களைச் சேகரிக்க 14 பொதுக்குப்பைத் தொட்டிகள் உள்ளன. இவ்வாறு பல மேலைநாடுகள் இன்றுபழைய காகிதங்களைப் புதுக்காகிதங்களாக்கி பயனடையவோடு குப்பைகளையும் ஒழித்து தங்கள் நகரங்களை அழகாக வைத்திருக்கின்றன. இவ்வாறு செய்வதனால் இந்

(11-ம் பக்கம் பார்க்க)

கமக்காரர்களுக்கும் - கடல்தொழிலாளர்களுக்கும்

ஓர் நற்செய்தி!

எல்லாவகையான நீர்இறைக்கும் யந்திரங்களுக்கும் அவுட்போட் மோட்டர்களுக்கும் உரிய

மக்னெற்றோ கொயில்கள்

(MAGNETO)

ஒரு வருட உத்தரவாதத்துடன் செய்து கொடுக்கப்படும்.

நியூ விக்ரேஸ்

23, மணிக்கூட்டுவீதி — யாழ்ப்பாணம்.

தமிழ் நாடக மேடையில் புதிய 'சொர்க்கம்' உருவாகிறது!

"பறவைகள்" முதல் "டயல் 'எம்' போர் மேடர்", "தீர்ப்பு" வரை கடந்த ஆண்டில் வெற்றி நடைபோட்ட "லிட்டில் ஸ்டேஜ்" குழுவினர் எழுத்தாளர் கே. எஸ். ஆனந்தனின் "சொர்க்"கத்தை மேடைஏற்றி, தமிழ் நாடகமேடையில் புதிய சொர்க்கத்தை சிருஷ்டிக்கவிருக்கிறார்கள்!

பண்பாடும், பழம் பெருமை பேசும் தமிழ் இனத்தின் பழம்பெரும் சின்னமாக "தாலி"யைப் பற்றி பிரச்சினை எழுப்பும் "சொர்க்கம்" தமிழ் நாடக மேடையில் பெரும் பிரச்சினையை உருவாக்கும் என்று இப்போதே சொல்லலாம்.

கலைத்துறையிலும்எழுத்துத்துறையிலும் புதுமை செய்து வரும் 'மாஞ' என்ற எம்.எம். மக்கீனின் பெருமுயற்சியால் மூன்று நாடகமன்றங்கள் ஒருங்கிணைந்து உருவாக்கப்பட்டதுதான் "லிட்டில் ஸ்டேஜ்". புதுமை செய்து கொண்டே இருக்க வேண்டுமென்ற 'மாஞ'வின் நோக்கம் இப்போது படிப்படியாக நிறைவேறிவருகிறது.

தலைநகரில் தமிழ் நாடக மேடையில் 1971-ம்ஆண்டு புதுபுரட்சியையும், சாதனையையும் தோற்றுவித்த பெருமையும் புகழும் "லிட்டில்ஸ்டேஜ்" குழுவினரையே சாரும். கலையுலகில் புதுமையைச் செய்யவேண்டும் என்ற ஆர்வமும், துடிப்பும் கொண்ட புதிய தலைமுறையைச் சார்ந்தவர்களே "லிட்டில் ஸ்டேஜ்"குழுவினர்கள்:

1971-ம் ஆண்டு ஜனவரி 3-ந் திகதி 'பறவைகள்" நாடகத்துடன் செல்வி தேவி, ஜெயா, ஜோதி, என்ற மூன்று சகோதரிகளாக தோற்றுவிக்கப்பட்ட 'லிட்டில் ஸ்டேஜ்"புதுமை தாகம் கொண்ட இளைஞர்களான புதுமை அரங்கைச்சேர்ந்த எம். எம். மக்கீன் (மாஞ), "சித்ரகலா" ஆந்தனி ஜீவா நடிகர் ஸ்ரீசங்கர், தங்கவேலாயுதம், கே. ஜெயராம் கிறிஸ்டி, சுசில் குமார். போன்றவர்களின் முயற்சியாக நாடகமேடையில் நல்லதோர் சாதனைசெய்யும் அமைப்பாக மாறியது.

மீண்டும்... பெப்ரவரி 7-ந் திகதி 'பறவைகள்' மேடை ஏறியது. மூன்று பெண்களையும், ஓர் ஆணையும் கவந்த எழுப்பப்பட்ட 'பறவைகள்" நான்கே பாத்திரங்களுடன் நாடகமேடையில் இரண்டு முறைவெற்றி நடைபயின்றது. இந்த நாடகத்தில் தேவகுமாரி, ஜெயா ஜோதிகுமாரி, "மஞ்சள் குங்குமம்" திரைப்பட நாயகன் ஸ்ரீசங்கர் ஆகியோர் பங்கு பற்றினார்கள், நாடகத்தின் நெறியாளர் ஆந்தனி ஜீவா இந்த நாடகமே நடிகர் ஸ்ரீசங்கரை 'குத்துவிளக்கு" திரைப்படத்தில்நடிப்பதற்கு வழிகாட்டியாக இருந்தது.

அடுத்து "லிட்டில்ஸ்டேஜ்" குழுவினரின் பெருமுயற்சியால் பத்தாண்டுகளுக்கு முன்னால் அரங்கேற்றப்பட்ட "டயல்"எம்"போர் மேர்டர்" என்ற துப்பறியும் நாடகம் மேடைஏறியது. இந்த நாடகத்தில் தமிழ் சினிமா திரைப்பட நடிகை ஹேலன்குமாரி பங்குபற்றியது குறிப்பிடத்தக்கது. இதுவே இவரின் முதல் மேடை நாடகமாகும். இவருடன் தங்கவேலின் தலைசிறந்த நடிகர்களான ஹிலெரியன் பெர்ணான்டோ உன்னிகுமார், சுசில்குமார், ஸ்ரீசங்கர் ஆகியோர் நடித்தார்கள். இந்த நாடகத்தை எம். எம். மக்கீன் (மாஞ) டைரக்ட் செய்தார் தமிழ் நாடக உலகில் "மாஞ" புதுமை செய்துள்ளார் என்று பலரும் பாராட்டினார்கள்.

"லிட்டில் ஸ்டேஜ்" நாடக அரங்கேற்றங்களில் மாத்திரம் கவனம் செலுத்தாமல் நாடக மேடையின் வளர்ச்சிக்காக கலைஞர்களிடையே காணப்படும் போட்டி, பொறாமைகள் நீக்கப்படவேண்டும் என்பதற்காக மற்ற நாடக மன்றங்களின் வளர்ச்சியிலும் ஆர்வம் காட்டியுள்ளது. 1971-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் தமிழர் முன்னேற்ற கலா மன்றத்தின் வெள்ளி விழாவையொட்டி பொழுது நாடகத்தை கலைமகள் சொர்ணலிங்கம் ஆசிரியர் கௌரவித்த பொழுது முன்னின்று வெள்ளிவிழாவெற்றி பெற மன்றம் நிர்வாகத்தை ஏற்றுக்கொண்டதுன் மற்ற மன்றங்களுக்கு வழிகாட்டியாக அமைந்தது.

தலைநகரில் தமிழ் நாடக மேடையில் என்ன நடக்கிறது என்பதை எல்லோரும் தெரிந்துகொள்ள நாடக ரசிகர்களுக்கு பயன்படும் வகையில் "நாடகம்? எங்கே? எப்பொழுது? என்ற பெயரில் செய்திக்கோர்வை ஒன்றை துண்டுப்பிரசுரமாக இலவசமாக வெளியிட்டது. தமிழகத்தில் கூட இது போன்ற முயற்சிகள் நடைபெற்றதில்லை என துணிந்து கூறலாம்.

"நாடகம்? எங்கே? எப்பொழுது?" என்ற நாடகக் கூப்பற்றி வெளியிடப் பெற்ற செய்திக் கோர்வையின் மூலம் நாடக உலகமே நன்கு பயன் பெற்றது. தமிழகத்து நாடக மேதை 'பத்மஸ்ரீ' டி. கே. சண்முகம் அவர்கள் கூட இதற்கு மனந்திறந்து பாராட்டுதல்கள் தெரிவித்துள்ளார்.

நாடகத்தின் நிலை, அவசர காலச்சட்டம் ஆகியவற்றின் காரணமாக செயல்படாமலிருந்த 'லிட்டில் ஸ்டேஜ்' குழுவினர் புதிய உற்சாகத்துடன் மீண்டும் செயல்படத் தொடங்கியுள்ளனர்.

வல்லை முன்னேடிகளின் அந்தக்குழந்தை என்ற பரிசு பெற்ற நாடகம் வாழ்நகரிலும், கொழும்பிலும் மேடைஏறியது: அதனை நயாரித்த பெருமை 'லிட்டில் ஸ்டேஜ்" குழுவைச் சேர்ந்த தங்கவேலாயுதத்தையே சாரும்.

சமீபத்திய நாடகங்களில் மிக வெற்றிகரிய நாடகமாக வானொலி பத்திரிகைகள் ஆகியவற்றின் மூலம் விமர்சகர்களால் விமர்சிக்கப்பட்ட 'தீர்ப்பு' நாடகத்தை தெரிப்பெடுத்தியவர் "லிட்டில் ஸ்டேஜ்" இணைச்செயலாளரான ஆந்தனி ஜீவாவாகும்! மற்றும் ஒலிப்பப்பு கலந்துதாயகத்தில் நாடகங்களைஞர்களுக்கு சந்தர்ப்பம் அளிக்கும்படி நேரிலும் கடித மூலம்தெரிவித்துள்ளார்கள். அது பெரும் வெற்றி அளித்து வருகின்றது.

—'சியாமளா'

புதுமுகத்துடன் முத்துராமன்

ஆதிபராசக்தியை ஆடுத்த கே. எஸ். கோபாலகிருஷ்ணன் சித்திராபுரொடக்ஷன்ஸ் சார் சமூகப்படம் ஒன்றைத் தயாரிக்கிறார்கள்.

வாழையடி வாழை என்று பெயர் சூடிடப்பட்டுள்ள இப்படத்தில் முத்துராமனுடன் புதுமுகம் பிரபா ஜோடியாக நடிக்கிறார்.

மந்திரதந்திரப் படங்களில் நடிக்க மறுத்தார் எம். ஜி. ஆர்.!

'மாயாஜாலம், மந்திரதந்திரங்களை நம்பவைக்கும் கதையில் நான் நடிக்கமாட்டேன்" என்று புரட்சி நடிகர் எம். ஜி. ஆர். கறினார்

'சாத்தானாயணம்"படத்தை டைரக்டர் ராமண்ணா தயாரித்தபோது எம். ஜி. ஆரைக் கதாநாயகனாகப் போட்டு எடுக்க முடிவுசெய்திருந்தார்.

மாயாஜாலம், மந்திரதந்திரங்கள் நிறைந்த படம் சாத்தானாயணம்.

எம். ஜி. ஆரிடம் இப்படத்தின் கதை தெரிவிக்கப்பட்டபோதே அவர் ராமண்ணாவிடம் இப்படியாக ஒரேயடியாகச்சொல்லிவிட்டார்.

இதற்குப்பிறகு சிவாஜியை ராமண்ணா நாடினார். சாத்தானாயணம்' சிவாஜி நடிக்க ஒப்புக்கொண்டார்.

ஈழத்து தமிழ் சினிமாத்துறையில் புதிய அத்தியாயம்!

குத்துவிளக்கு!

வறுமையும், பண்பாடும் போற்றிப்பேணும் ஈழத்தமிழினத்தின் புனிதச்சின்னம் 'குத்துவிளக்கு!"

பூஜையறையில் புனிதஒளி பரப்பும் 'குத்துவிளக்கு'—

ஈழத்துத் தமிழ் சினிமா அரங்கிலும் இம்மாதம் 24ம் திகதி முதல் ஒளிபரப்பப் போகிறது.

கலைஞர் வி. எஸ். துரைராசாவின் இரவு பகலான உழைப்பின் வெற்றியைத் தான் ஈழத் தமிழ் ரசிகர்கள் காணப்போகிறார்கள் என்று சொல்லலாம்.

மண்ணின் மணத்தை எடுத்தளித்து. 'நமக்கென்று ஒரு கலாச்சாரம், பண்பாடு, இருக்கிறதென்பதை வலியுறுத்தும் வகையில் இந்தப் படத்தின் கதையை எழுதி திரையில் தருகிறார் கலைஞர் வி. எஸ். வி.

இந்தப்படத்தின் டைரக்டர் மகேந்திரன் ஒருதிறமைசாலி என்பதை நிரூபிக்கும் வகையிலும்—

இந்தப்படத்தின் கதாநாயகர்கள் ரி. நமசிவாயம் (11-ம் பக்கம் பார்க்க)



பூவுலகமே உங்கள் பாதடியில்!

பாதனிப் பாணியில் சதா மாற்றங்கள் ஏற்படுகின்றன; காலத்துடன் பாதடி வைப்பது அற்பகாரியமல்ல. எனவே பாடா உங்கள் பாதனிப் பாரமானியாகட்டும்....
பிரசித்திபெற்ற ஐந்து உருவமைப்புகள் எம்மிடம் உள. பாடா பூவுலகையே உங்கள் பாதத்தில் நாற்றும்.

சிறுபோகச் செய்கையில் செழிக்கும் பயிர்கள்

உப உணவுப் பயிர்களையும், பகுதாரப்பயிர்களையும் பண்டைக்காலம் தொட்டு வாழ்ப்பான விவசாயிகள் செய்கை பண்ணி வருகிறார்கள். பாசிப்பயறு, பயற்றை சணல்போன்ற பயிர்களினால் இருவிக நன்மைகள் பெறப்படுகின்றன.

அவரைப் பயிர்களில் உள்ள வேர் முடிச்சுகளில் பக்டீரியங்கள் உண்டு. இவை வளிமண்டலத்திலுள்ள நைதரசனை நிலத்தில் சேமித்துவிடுகின்றன. அத்துடன் இப்பயிர்களின் இலைகளும் தரையில் சேரும்பொழுது போதிய சேதனப் பசளையைக் கொடுத்து நிலமகளை அதிகரிக்கின்றன.

கடலை, உழுந்து, துவரை போன்ற பருப்பு வகைகள் மாமிசம் உண்ணாதவர்களுக்கு சிறந்த புரத உணவாகின்றன.

நெற் செய்கைக்குப்பின் சணலைப் பயிரிட்டு அதனுடன் கும்பருவத்தில் உழவுசெய்து நிலத்துடன் சேர்க்கும்போது பத்து நாளில் பசுந்தாள் பசளை நிலத்துக்குக்கிடைக்கின்றது. இதனால் தரையின் வளமும் நன்கு அதிகரிப்பது மல்லாமல் காலபோகத்தில் பெறுகக்கூடிய புல்லூடு களைக் கட்டுப்படுத்தி நெல் விளைவை அதிகரிக்க உதவி கமக்காரர்களுக்கு நன்மை பயக்கிறது. அத்துடன் தரைக்கு இடவேண்டிய யூரியா போன்ற நைதரசன் பசளைகளை அரைப் பங்காகக் குறைக்கும் உதவுகிறது.

கிளிநொச்சிப் பகுதி விவசாயிகள் வாழ்ப்பாணத்திலிருந்து குடிபெயர்ந்து வந்தவர்கள் ஆகையால் அவர்களுக்குப்பாசிப்பயறு, ஆமணக்கு பயறு, நிலக் கடலை சணல் போன்ற அவரைப் பயிர்களின் முக்கியத்தைப் பற்றி அதிகம் கூறவேண்டிய அவசியமில்லை. 1971-ம் ஆண்டு சரல்வதிபூசை, திருவெம்பாவை பூசை காலத்தில், பாசிப்பயறு தம்டுப்பாடும் அதன் மிக உச்ச விலையும் கமக்காரர் எல்லோரும் நன்கு அறிந்த விஷயம்

பாசிப் பயறு

இது இந்தக்களிமண்திருமலையிலும், ஆமர கிரியைகளுக்கும் உபயோகமானது. இனங்கள் (1) B. P. I-3 பளபளப்பான பெரிய மணிகள். இவை பிலிப்பையின் தேசத்திலிருந்து அண்மையில் பெறப்பட்டது.

(2) M. I. 1 பளபளப்பான பெரிய மணிகள் இவை மலாயாப்பல்கலை ஆராய்ச்சி நிலையத்தில் தெரிவு செய்யப்பட்டது.

(3) M. I. 3 சிறிய மணிகள்.

உலர் வலயத்தில் பயிரிடும் காலங்கள்

பெரும் போகப் பயிராகக் கடும்மழை முடிந்தபின் மார்கழி 15-க்குப்பின் பயிர்செய்யலாம். இறுபோகப் பயிராக பங்குனி பிற்பகுதியிலிருந்து சித்திரை முற்பகுதிவரை பயிர் செய்யலாம்.

ஓர் ஏக்கருக்கு வேண்டிய விதையளவு

விக்க விதைப்பு 10-12 ருத்தல்.

நிரையில் விதைப்பு -6 ருத்தல்

எதிர்பார்க்கக் கூடிய விளைவு 4-5 அந்தர் உரிய காலத்தில் பசளையிட்டு பயிர் செய்தால் ஏக்கருக்கு 6-8 அந்தர்வரை விளைவு பெறலாம்.

இதன் ஏக்கர் பயிர்ச்செய்கைச் செலவு 200/- ரூபா.

உத்தரவாத விலை அந்தர் ஒன்றுக்கு

(1) முதல்தரம்- 67.20

(2) இரண்டாம் தரம்- 61.60

இதனால் கந்தலாபம் 200/-க்கு மேல் ஒரு ஏக்கருக்கு கிடைக்கிறது. விதை நீக்கிய சோளம் செடியும் சிறந்த காக் நடைத் தீனியாகவும் உதவுகிறது.

(2) ஆமணக்கு பயற்றை (கொம்புப் பயற்றை) இது சிறந்த மரக்கறி உணவு. பருப்பு வகைக்குப் பதிலாகவும், காய்ந்த விதைகள் பாகிக்கலாம்

மு. க. நடராஜா

[இளைப்பாறிய மாவட்ட விவசாய விஸ்தரிப்பு உத்தியோகத்தர்]

ஓர் ஏக்கருக்கு வேண்டிய விதையளவு- 10 இருத்தல் உயர்வலயத்தில் பயிரிடும் காலங்கள்.

நெல் வேளாண்மைக்குப் பின் பங்குனி முற்பகுதியில் இந்தப் பயிர் நெல்வேளாண்மை விதைத்ததுமுடிந்தபின் ஐப்பசிக் கடைசியில் வயல் வரம்புகளில் 2'X2' தூரத்தில் நாட்டுப் பயன் எடுக்கலாம்.

விளைவு சிறந்த பயிர்ச் செய்கை முறையில் 800-1000 இருத்தல் (ஏக்கர் ஒன்றுக்கு) பெறலாம். இதன் ஏக்கர் பயிர்ச் செய்கைச் செலவு 200/ 250/- ரூபா.

உத்தரவாதவிலை 56/ ரூபா ஓர் அந்தர்

சுத்தலாபம் 200/-, 350/- ரூபா.

நிலக்கடலை

கிளிநொச்சி மேக்காரர்களுக்கு இதுபற்றி நன்கு தெரியும்.

இனங்கள் (1) M. I. I. (2) பப்பான் பெரிய இனம். (3) A 20 (4) A 92

முதலாவதும் இரண்டாவதும் இனங்கள் மலாயாப் பல்கலை ஆராய்ச்சி நிலையத்திலிருந்து கூடிய விளைவைக்கொடுத்திருக்கிறது. ஓர் ஏக்கருக்கு வேண்டிய விதை அளவு 100-120 இருத்தல் (சோதனை).

விளைவு 10-15 அந்தர்

இதன் ஏக்கர் பயிர்ச்செய்கைச் செலவு- 300 ரூபா உத்தரவாத விலை 49/28 ஓர் அந்தர். சுத்த லாபம் 200-250ரூபா. சந்தை மதிப்பைப் பொறுத்து இருத்தல் 70-80 சதம்வரைகூடி விலைக்கு வெளிச்சந்தையில் விற்க முடியும் இது நிலாவம் பற்றி கமக்காரர். அரசாங்கத்துக்கு உத்தரவாத விலைக்கு கொடுக்கிறது மிக்குறைவு அரவணைக்குப் பின் கண்டுகளாக நடைத் தீனியாகவும் உதவுகிறது.

சோயா கோஞ்சி

இவ்வினப்பயிர் கிளிநொச்சிப் பகுதி விவசாயிகளுக்குப் புதிய பயிராகையால் இதுபற்றி பூரண விபரம் கீழேதரப்பட்டுள்ளது.

ஐக்கிய அமெரிக்காவில் இது ஓர் முக்கிய பயிராகச் செய்கை பண்ணப்படுகிறது. விதைகளில் இருந்து தாவர நெய் பெறப்படுகிறது. இது கோழித்தீனியாகவும், மாடுத்தீனியாகவும் பயன்படுகிறது. மீன்தூளுடனும், சோளமாத் தானியத்துடனும் கலக்கப்படுகிறது. இதன் இனத்தை கிளிநொச்சிப்பகுதியில் பரீட்சார்த்தமாக உண்டுபண்ண முடியும்.

பயிர்ச்செய்கைமுறை

தூரத்தில் அமைக்கப்பட்ட வரம்புகளில்விதைகளை நிரையில் விதைக்கவும் பயிர்நிலை பங்களுக்கிடையில் 6"-9" இருக்கக்கூடியதாகப் பயிரிட வேண்டும். விதைகளாய்ந்த நிலையிலே நடவேண்டும் விதைத்திட்ட 5-ம் நாள் நீர்பாய்ச்ச வேண்டும். வாய்க்காலில் அரைப்பங்கு உயரத்திற்கு நீர்நிரப்புதல்வேண்டும் பின் இரண்டு வாரங்களுக்கொரு முறை வாய்க்கால் நிறையக் கூடியதாக நீர் பாய்ச்சுதல் வேண்டும்.

பசளையிடுதல்

(1) பயிர் நடும்பொழுது அதிகளவு ஒரு அந்தர் போடப்படுதல் வேண்டும். (2) 3-ம் வாரம் நவச்சார அந்தரை (அமோனியம் சல்பேற்)1 அந்தர் மேற்கட்டாகப் போடுதல் வேண்டும். (3) பயிர்வெளிறி மஞ்சள் நிறம் உடையதாகக் காணப்படுமாயின் மீண்டும் அரை அந்தர் மேற்கிடாகப் போடலாம்.

களை அகற்றல்

3-ம், 6-ம், வாரங்களில் களைகளைக் கட்டுப்படுத்தல் வேண்டும்.

நோய்களும் பூச்சி புழுக்களும்

மயிர்க்கொல்லி-என்றின்ஒரு ஆவுக்கு 2 லன் நீர் வீதம் கலந்த பயிர் நாசினி கூடியதாக 3-ம், 6-ம் கிழமைகளில் தெளிக்கவும்.

விளைவு சேர்த்தல்

தானியங்கள் முதிர்வடைந்ததும் இலைகள் உதிர்ந்து விடும். ஒரே நடவையில் விளைவைச் சேர்த்து அடிக்காக் அடித்து அல்லது உழவு யந்திர உதவியாலிதனை வேருக்கலாம்.

விளைவு

நீர் பாய்ச்சல் வசதியுடன் 1500 ருத்தல் வரைஒரு ஏக்கருக்கு கிடைக்கும். மலாய இதுப்பல்லைகூராய்ச்சி நிலையத்தில் 2000 ருத்தல்பெறப்பட்டது

பயிர்ச்செய்கைச் செலவு: 250/- 300/-ரூபா.

கந்தலாபம்: 250/- 300/-ரூபா.

இருத்தல் 50சதவீதமாக மலாய இதுப்பல்லை ஆராய்ச்சி நிலையத்திலிருந்து நடுகை விதைகள் பெறலாம். விதைகளை தேவாகிலுள்ள இலக்கை எண்ணைக் கொழுப்புக் கம்பெனிகளிற்கு விற்கலாம்.

சணல்

நடுகை விதை- 60 ருத்தல் இது 45 நாட்களில் பூக்க ஆரம்பிக்கும். அந்தவேளையில் இதனை அழித்து உழவு செய்தால் ஏக்கர் ஒன்றிற்கு 10 தொன் பசுந்தாள் பசளை கிடைக்கும்.

மேற்கூறப்பட்ட பயிர்களுக்குத்தேவைப்படும்நீர்ப்பாசனம் இந்திய கமத்தொழில் ஆராய்ச்சி நிபுணர்கள் ஒரு ஏக்கர் நெல் வேளாண்மைக்குத்தேவையானநீரைக் கொண்டு மேற்கூறப்பட்ட பயிர்களுக்கு ஒன்றைஐந்து ஏக்கரிக்கணக்கிலாவது கருதுகின்றனர் ஆனால்திட்டமாக ஒரு ஏக்கர் வேளாண்மைக்குத்தேவையானநீரைக் கொண்டு 3 ஏக்கர் விளைவிக்கலாம். சித்திரை, வைகாசி மாதங்களிலிமழை இருப்பின் 8 வாரத்திற்கொருமுறைநீர் பாய்ச்சல் அவசியமில்லை.

மேதைகள் தமாஷ்!

47 ருத்தல் குழந்

ஜனாதிபதி லிங்கன் தன் வாழ்க்கையில் பல பொய்யர்களைச் சந்தித்திருக்கிறார். வழக்கறிஞர் ஒருவர் அவர் பார்த்த பொய்யர்களையெல்லாம் தூக்கியடிப்பவராக இருந்தார் அவர் எவ்வளவு பெரியபுளுகர் என்பதை விளக்க லிங்கன் தம் நண்பர்களிடம் ஒரு செம்படவனின் கதையைச்சொன்னார்.

அந்தச் செம்படவன் ஒரு பெரிய புளுகுணி. அவன் எப்போதும் தன் நாணயத்தைக்காட்டி, தான்பிடித்து வந்த மீன்களை எல்லோர் முன்னிலையிலும் ஒரு தராசில் போட்டு நிறுத்துக்கொடுப்பானாம். ஒருநாள் ஒரு டாக்டர் அவன் வைத்திருந்த தராசை வாங்கி, புதிதாகப் பிறந்த குழந்தையை நிறுத்துப்பார்த்தாராம். அதில் அந்தக் குழந்தையின் எடை 47 ருத்தலாக இருந்தது?

★

நண்பர்கள் சிலர் சேர்ந்து லிங்கனைப்பற்றியும் அவரோடு சேர்தலில் போட்டியிட இருந்தவரைப் பற்றியும் பேசிக்கொண்டிருந்தார்கள். டைசியில் ஒரு மனிதனுடைய கால் எவ்வளவு நீளம் இருக்கலாம் என்று பேச்சுத்திரும்பியது லிங்கன் பிறர் கலனியாதவாறோய் சேர்ந்துகொண்டார். திடீ

ரென்று ஒரு நண்பர் லிங்கனைக் கலனித்துவிட்டு "என்ன மிஸ்டர் லிங்கன்" ஒரு மனிதனுடைய கால் எவ்வளவு நீளம் இருக்கலாம்? என்று கேட்டார்.

"அதுவ[illegible] டும் தரை[illegible] வுக்கு நீ[illegible] இருக்க[illegible] நினைக்கி[illegible] அவித்த[illegible]

ஒருநா[illegible] கம் நோ[illegible] சொண்டி[illegible] முன்னா[illegible] சொண்[illegible] சிறுமி. [illegible] விடுவதற்[illegible] ஆனால் [illegible] கலக்க[illegible] துக்கொ[illegible]

"உன்[illegible] மனி?" எ[illegible] லிங்கன்.

"மேரி [illegible] அந்தச் சி[illegible]

"நல்ல[illegible] போனால் [illegible] லின் ம[illegible] கொண்ட[illegible] சொல்லி[illegible]

"ஆர்வி"

அந்நியச் செலாவணிப் பற்றுக் குறைக்கு காரணம் என்ன?

சோ. வன்னியசிங்கம்

(யாழ்ப்பாணக் கல்லூரி)

...ிசிக்ற கட்டுரையில் ...டைய வர்த்தகம் வளர் ...டைத்தால் மட்டுமே ...த்த நாடிடிலும்பொரு...ம் உச்சமடைந்தை ...யும் என்பதையும், அவ் ...பொருளாக்கம் பெரு ...மடிடுமே உழைப்புச் ...ப்பம் விரிவடைந்த ...யிலாத் திண்டாட் ...த போக்கடிக்கும்வாய் ...ருவாகும் என்பதையும் ...தோம். மேலும் இக் ...சேக்களை எய்துதற்கு ...ய மாற்று விதம் தளம் ...நிலைப்படுத்தல் ...யம் என்ற காரணத் ...இரண்டாவது உலக ...முடிவில் நேசநாடுகள் ...நேசநாணய நிதி நிறுவ ...என்ற உலகந்தழுவிய ...உருவாக்கின் என்றும் ...தாபனம் மேலே ...பிடிட குறிக்கோள்களைச் ...ர்களாக, உறுப்புநாடு ...டைப்பிடிக்கவேண்டிய ...இலக்கியங்களைப்பிர ...ம் செய்துகொண்ட இலக் ...களை நிறைவேட்டிட சில ...டிக்கைகளை மேற் ...ள்ளவேண்டிய அமைப்

பொருளாதாரம் —

...யும் வாய்ப்புக்களை ...த்தது என்றும் அறிந் ...

...ும் உலையுத்தம் விளை ...சேர்வேடிடின் காரண ...புத்தத்தில் ஈடுபட்ட ...டுகளும் இறக்குமதிக் ...பாடுகளையும் அந்நி ...செலாவணிக் கட்டுப் ...டையும் மிகவும்விரைப் ...அவசியம் நிர்வகிக்க ...டிய நிர்ப்பந்தத்தில் ...தன. முக்கியமாக ...ப்பிய நாடுகளின் ...ளாதார அமைப்பு ...ப் பெற்றும் புத்த ...டிது. வாய்ப்பாக ...திடுப்பம் செய்யப் ...ும் இருந்தன. எனவே ...வையைப் பூர்த்தி ...ப் வேண்டிய ...வாகிய நுகர்ச் ...ளாருக்களின் ஒடு ...ரத்தையே உற்பத்தி ...யும் நிலையில் இருந் ...அவ்வத்தியாவசிய ...ச்சிப்பொருட்களையே ...மனிக் இறக்குமதி ...யும் நிலையில் உயர் ...த்தியோ ஏற்றுமதியோ ...டுமென்று என்ன ...டிவதிக்க. ஏற்றுமதி

...ளிக் கட்டுப்பாட்டின் நிர் ...வகித்தல் தவிர்க்கமுடியாத ...கிவாகியது.

எமது தேவைக்குப்போதிய ...அளவு அந்நியச் செலாவணி ...பெறமுடி ...யாத நிலையில் நாம்இருப் ...பதால் பெறக்கூடிய அந் ...நியச் செலாவணியை 'ரேஷன்' செய்து விநி ...யோகிப்பது போலவே அந் ...நியச் செலாவணிப் பற்றுக் ...குறையால் பீடிக்கப்படும் ...நாடுகளும் கிடைக்கும் அந் ...நியச்செலாவணி வருவாயை ...'ரேஷன்' செய்து வெவ் ...வேறு தேவைகளுக்கு முக்கி ...யத்துவப் படிவரிசைப் பி ...மாணத்தில் ஒரளவு அந்நி ...யச் செலாவணியை 'கிரெ ...டிட்' 'பேர்மிற்' மூலம்வழங் ...குவதே இறக்குமதி அந்நி ...யச் செலாவணிக் கட்டுப் ...பாட்டின் நியதியும் அர்த்த ...முமாகும்.

புத்தத்தில் ஈடுபட்ட அல் ...லது புத்தத்தினால் பாதிக்கப் ...பெற்ற பல நாடுகளும் விரை ...வாக ஐரோப்பிய நாடுக ...ளும் அனுபவித்த இத்தகைய ...இக்கட்டான நிலையில் ...மறுபுறத்து அம்சம் என்ன ...வெனில் இந்நாடுகளின் அந் ...நிய செலாவணிப் பற்றுக் ...குறை நிலைமை அமெரிக்கா ...வுடனேயே ஏற்பட்டது. ஒரு ...நாடு செய்யும் அந்நியச் ...செலாவணிச் செலவு வேறு ...ஒரு நாட்டினால் பெறப்படு ...கிறது. ஒரு நாடு செய் ...யும் இறக்குமதி வேறு ...ஒரு நாட்டின் ஏற்றுமதி ...யாகவே இருக்கக்வேண்டும். ...எனவே உலகரீதியில் கணக் ...கெடுக்கும்பொழுது மொத் ...தக் கொடுக்குமதியும் ...மொத்தச் செலுமதியும் ஒன் ...றுக்கொன்று சமனாகவே ...இருக்கவேண்டும். சிற்சில ...நாடுகள் அந்நியச் செலா ...வணிப் பற்றுக்குறையில் ...இருக்க சிற்சில நாடுகள் ...அந்நியச்செலாவணி ...மிகை நிலையில் இருக் ...கும். அல்லாது புத்தம் முடி ...ந்த சகாப்தத்தில் கணிச ...மான மிகை நிலையில் இருந்த ...ஒரே ஒரு நாடு ஐக்கிய அமெ ...ரிக்கா என்று சொல்லவேண் ...டும்.

ஒரு நாடு அந்நியச் செலா ...வணிப் பற்றுக்குறைநிலை ...மையை எய்துவதற்குகாரண ...மாக இருக்கும் சக்திகள் ...யாவை என்பதை ஆராய் ...வோம்.

(A) புத்தகாலத்தில் உற் ...பத்தி சீரழிந்து ஏற்றுமதி ...செய்ய முடியாமல் அந்நி ...யச் செலாவணி பற்றுக் ...குறை நிலைமை ஏற்படுவது ...இயல்பு. இது சாதாரண ...விளைவு.

(B) ஒரு நாட்டு மக்கள் ...செய்யும் நுகர்ச்சி மட்டத் ...திற்குச் சமமாகக்கூடியவகை ...யில் போதியளவு உற்பத்தி ...செய்யும் வாய்ப்பு இல்லா ...மல் பெருமளவு இறக்குமதி ...செய்யவேண்டிய காரணத் ...தால் பாரதூரமான அந்நி ...யச்செலாவணிப் பற்றுக் ...குறை அந்நாடுகளைப் பீடித் ...தது. ஆகவே விதிவிலக்கான ...இறக்குமதி அந்நியச் செலா ...உருவாகாத விடத்தால் அந் ...நாட்டின் ஏற்றுமதியிலும் ...பார்க்கஇறக்குமதி அதிகரித் ...தப் பற்றுக்குறை நிலைமை ...ஏற்படும். முக்கியமாக மக் ...கள் நலவரசு (Welfare State) ...கொள்கையைக்கடைப்பிடிக் ...கும் நாடுகள் பற்றுக்குறை ...வரவு-செலவுத்திட்டத்தைக் ...கையாண்டு துண்டுவிழும் ...தொகையை மத்திய வங்கி ...யில் கடன்பெறுவதன்மூலம் ...ஈடுசெய்வதனால் மக்களின் ...பணவருவாயும் நுகர்ச்சிச் ...செலவுமட்டம் உற்பத்திக்கு ...மேலதிகமாகி, நுகர்ச்சியின் ...பெருக்கம் இறக்குமதி ...நாட்டமாக உருவெடுத்து ...அந்நியச் செலாவணிப்பற் ...றுக்குறை ஏற்படும்.

(C) தீவிரமாக அபிவிருத் ...தித் திட்டங்களை நிறைவேற் ...றும் நாடு பெருமளவு மூல ...தனங்களைச்செலவழிக்கக்கூடும். ...அவ்வாறு மூதலீடாகச் செலவு ...ழிக்கப்படும்தொகை பொது ...மக்கள் கையில் வருவாயாக ...உருவாகும். மக்களின்கையில் ...வருவாயாகக் கிடைத்த ...பணம் பொருட்களை சேவை ...களைக் கொள்வனவு செய்ய ...அதற்குஉபயோகிக்கப்பெறும். ...ஆனால் அபிவிருத்தித்திட்டங் ...களில் இடுபடுபவர்கள் ...பொருளாக்கம்ஏற்படுவதோ ...அதிகரிப்பதோ எதிர்பார்க் ...கக்கூடிய விடயமன்று. இதர ...சொற்களில் கூறினால் கூடன ...டிப் பொருளாக்கத்திற்கு ...அல்லாத நெடுந்தவணை மூதல் ...ஈட்டுச்செலவு சந்தைப்படுத் ...தக்கூடிய பொருளாக்கத் ...தைத் தடுக்கிறது. நுகர்ச் ...சிச் செலவு மட்டத்தை மட் ...டும் அதிகரிக்கும். இதனால் ...ஒடுபுறம் விலைவாசி ஏறும். ...மறுபுறம் இறக்குமதிகள் ...அதிகரிக்கும் அந்நியச்செலா ...வணிப் பற்றுக்குறை இயல் ...பாகவே ஏற்படும்.

